★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரீஸ்
★ டபிள் செற் பீஸ் பெனாரீஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி பட்டுச் சோலை
70, 71A, சிறப்பு அங்காடி நவீனசந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு ஏற்ற பட்டுப் புடைவைகள் மற்றும் சகல விதமான ரெடிமேற் வகைகளுக்கு
ராசி சில்க்ஸ்

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 06 வெள்ளிக்கிழமை (22 - 07 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 236

# வல்வையில் இரண்டாவது நாளாக நேற்றும் பொம்மர்கள் குண்டுவீச்சு!

## 6 பிள்ளைகளின் தந்தை பலி; வீடுகள் பல இடிந்து நாசம்!!

வல்வெட்டித்துறை, ஜூலை 22

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றும் இரண்டாவது நாளாக இரு பொம்மர்களும் ஹெலியும் தாக்குதல் நடத்தின. காலை ஆரம்பமான தாக்குதல் பகல் 1.15மணி வரை நீடித்தது.

நேற்றைய தாக்குதலில் ஆறு பிள்ளைகளின் தந்தை ஒருவர் முதுகுப் பகுதி பிளந்த நிலையில் சம்பவம் நடந்த இடத்திலேயே பலியானார். மேலும் நால்வர் படுகாயம் அடைந்தனர். குண்டு வீச்சினால் வீடுகள் பல இடிந்து தரைமட்டமாகின. கால்நடைகள் பலவும் உயிரிழந்தன.

காலை 8.10 மணியளவில் ஹெலி ஒன்று பொலிகண்டிப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது சுமார் 45 நிமிடங்கள் வரை தொடர்ச்சியாக கலிபர் தாக்குதல் நடத்தியது.

பின்னர் நண்பகல் 11.55 மணியளவில் ஹெலி சகிதம் வந்த இரு பொம்மர்கள் வல்வையில் பல பகுதிகளில் குண்டுகளைப் பொழிந்து தள்ளின. அப்பகுதிகளில் ஒன்பது குண்டுகள் வீசப்பட்டன.

ஆதி கோவிலடிப் பகுதியில் குண்டு வீச்சுக்கு இலக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மேடை இடிந்து விழுந்த சம்பவம் இரகசியப் பொலீஸார் விசாரணை

கொழும்பு, ஜூலை 22

நேற்று முன்தினம் கொலன்னேயில் ஐ.தே.க. பிரசாரக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது, கூட்ட மேடை சரிந்து விழுந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை நடத்துவதற்காக கொழும்பில் இருந்து இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேடை சரிந்து விழுந்த சமயம் மேடையில் ஜனாதிபதி விஜேதுங்கா அமர்ந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதிக்குச் சாயம் ஏற்படவில்லை என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

மேடையில் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் விமல் விக்கிரமசிங்க, நந்தா மத்தியூ அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து கொண்ட டாக்டர் ராஜித சேனரத்னா ஆகியோரும் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

## சேறு பூசிய உடையில் டி.பி.

கொழும்பு, ஜூலை 22

நேற்று முன்தினம் மாலை தெரணியகலையில் நடந்த ஐ.தே.க. பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி விஜேதுங்கா சேறு பூசிய உடையுடனேயே கலந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு முன்னர் அவர் கலந்து கொண்ட கொலன்னே தேர்தல் கூட்டத்தில் கூட்டமேடை சரிந்து விழுந்தது தெரிந்ததே. (இ-எ-6)

## ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

சென்னை, ஜூலை 22

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேசிக்கொண்டிருந்த மேடை இடிந்து விழுந்த சம்பவத்தைத் தொடர்ந்து அவரது பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டிருப்பதாக இந்திய வானொலி தெரிவித்தது. (ஐ)

# பண்டத்தரிப்பில் நேற்று முன்னேறி வந்த படையினரை புலிகள் விரட்டியடித்தனர்!

## 6மணி நேரமாக உக்கிரச் சண்டை!

பண்டத்தரிப்பு, ஜூலை 22

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்றுக் காலை முன்னேற முயன்ற படையினரை, விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்,

நேற்றுக்காலை 6,30 மணி முதல் நண்பகல் 12.30 வரை – 6 மணி நேரம் – இடம்பெற்ற கடும் சண்டையைத் தொடர்ந்து, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிப் பகுதியில் இருந்து படையினர் பின்வாங்கி, மீண்டும் பழைய இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

இளவாலை, மாதகல் பகுதி முகாம்களில் இருந்த இரு அணிகளாகப் படையினர் வயல் வெளிகள் ஊடாக முன்னேறி வந்தனர்.

ஓர் அணி இளவாலையில் இருந்து பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலயம், கன்னியாஸ்திரியர் மடத்தடி பகுதிகள் ஊடாகவும் —

மற்றைய அணி மாதகல் பகுதியில் இருந்து வயல் வெளியூடாக பண்டத்தரிப்பு சந்தி வரையும் — முன்னேறி வந்தன.

படையினரின் முன்னேற்ற முயற்சியின் போது ஹெலிக்கொப்டர் வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி இருந்தது. அதேசமயம், பண்டத்தரிப்புக் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

முன்னேறி வந்த படையினர் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் அகோர ஷெல் தாக்குதல்! பிரான்பற்றில் ஒருவர் பலி; 11 பேர் காயம்

பண்டத்தரிப்பு, ஜூலை 22

பண்டத்தரிப்புப் பகுதியில் நேற்று படையினரின் முன்னேற்ற முயற்சியின் போது ...

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல் வீச்சில் 11 பேர் படுகாயமடைந்தனர்.

அடுத்தடுத்து பெரும் சத்தத்துடன் ஷெல்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

ஷெல் வீச்சினால் வீடுகள் பல சேதமடைந்தன. பிரான்பற்றுப் பகுதியில் ஒரு வீட்டின் மேல் விழுந்து வெடித்த ஷெல்லினால் வீட்டுக்காரரான தம்பு துரைராசா (65 வயது) கழுத்திலும் முதுகிலும் படுகாயமடைந்து அந்த இடத்திலேயே மரணமானார்.

கலவரமடைந்த மக்கள் நாலாபுறமும் ஓடிக்கொண்டிருந்த வேளையில் ஷெல் வீச்சுக்கு இலக்காகி 11 பேர் படுகாயமடைந்தனர்

பிரான் பற்றில் விழுந்த ஷெல்களினால் காயமடைந்தவர்கள் வருமாறு:-

இராசு ஜெயமலர் (8 வயது) அவரது சகோதரன் (26 வயது) இவர்கள் அந்தோனியார் தேவாலயப் பகுதியில் வசித்து வந்தவர்கள்.

யோசப் டன்ஸி (11 வயது) அவரது சகோதரி டனிஸி (9 வயது) இவர்கள் பண்டத்தரிப்பு பற்றிமா கோவிலடியைச் சேர்ந்தவர்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் பெருமளவில் இடம்பெயர்வு

பண்டத்தரிப்பு, ஜூலை 22

அகோரச் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து, பண்டத்தரிப்பு, காலையடி, பனிப்புலம், வடலியடைப்பு, பிரான்பற்று முள்ளியடி, விளான் ஆகிய பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வெளியேறிச் சென்றனர்.

இவர்கள் மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், சித்தன்கேணிப் பகுதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றதை அறிந்து கொண்ட பலர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது.

இதற்கிடையில் —

நேற்று படையினரிடம் பலர் சிக்குண்டு பின்னர் தப்பி வந்ததாகவும் —

சிலர் படையினரின் பிடியில் சிக்கிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (ஓ-15-28)

## சுன்னாகம், அளவெட்டியில் ஹெலி வேட்டு

சுன்னாகம், ஜூலை 22

சுன்னாகம், மல்லாகம், அளவெட்டிப் பகுதியில் நேற்றுக்காலை 7 மணியளவில் ஹெலி ஒன்று பரவலாக சுமார் ஒருமணி நேரம் வேட்டுக்களை தீர்த்தது.

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதற்றம் அடைந்தனர்.

சுன்னாகம் சந்தையில் கூடியிருந்த மக்கள் வேறு இடங்களுக்கு ஓடி பாதுகாப்புத் தேடிக் கொண்டனர்.

## பலாலி ஷெல்லுக்கு ஏழாலையில் பெண் காயம்

பலாலி இராணுவமுகாமில் இருந்து நேற்று இரவு 8 மணியளவில் ஏழாலைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் பெண் ஒருவர் காயமடைந்தார். வீடுகளும் சேதமடைந்தன.

ஏழாலை கிழக்கில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராமச்சந்திரன் பவானி (வயது 36) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## மாஹோவில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

"மாஹோ" கப்பலில் 205 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் இருந்து நேற்று யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்ட இத் தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு நாளை முதல் விநியோகிக்கப்படும் என்று யாழ். பிரதம தபாலதிபர் திரு. க. கோடீஸ்வரன் தெரிவித்தார். (இ-3-173)

## சதிச்செயல் என்கிறார் காமினி விஜேசேகரா

கொழும்பு, ஜூலை 22

கொலன்னேயில் நேற்று முன்தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்ட மேடை சரிந்து விழுந்த சம்பவம் ஒரு சதிச் செயலாகும் என்று தகவல் கிடைத்திருப்பதாக ஐ.தே.க. பொதுச்செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா தெரிவித்திருக்கிறார்.

இது சம்பந்தமாக இரகசியப் பொலீஸார் விசாரணையை ஆரம்பித்துள்ளனர் என்றும் —

விசாரிப்பதற்காக சில நபர்களை அவர்கள் கைது செய்துள்ளனர் என்றும் டாக்டர் விஜேசேகரா நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (இ-எ-6)

## வல்வை ஆஸ்பத்திரிக் கூரை ஹெலி வேட்டினால் சேதம்

வடமராட்சி, ஜூலை 22

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை நேற்று ஹெலி நடத்திய தாக்குதலின் போது சேதமடைந்தது.

நேற்றுப் பகல் 11-45 மணியளவில் ஹெலி நடத்திய கலிபர் தாக்குதலினால் முதலாம் இலக்க வார்ட்டின் கூரை சேதமானது.

இச்சம்பவத்தை அடுத்து வெளிநோயாளர்கள் மற்றும் வார்ட்டில் இருந்தவர்கள் பதற்றமடைந்து பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர். (ஓ-173)

## ஊழல், முறைகேடுகள் குறித்துடி.பிக்குகடிதம்

கொழும்பு, ஜூலை 22

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஊழலும் முறைகேடுகளும் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் டி. எச். ஜயரத்னா ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

தேர்தல் பிரச்சாரங்கள் நடத்துவதற்கு தடைகளை ஏற்படுத்தும் பொலீஸாரின் நடவடிக்கைகளை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி ஜனாதிபதிக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் திரு. ஜயரத்னா கேட்டுள்ளார்.

வாக்களிப்பு தினத்தன்று கடமையாற்ற எதிரணி தெரிவு செய்துள்ள வாக்களிப்பு நிலையப் பிரதிநிதிகளை தேர்தல் தினத்தன்று அல்லது அதற்கு முதல் நாள் பொலீஸாரைக் கொண்டு கைது செய்யும் திட்டம் இருக்கிறது.

இத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் பொறுப்புமிக்கவர்கள் பொலீஸ் அதிகாரிகளின் ஒத்துழைப்பைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

வாக்களிப்பு முகவர்களை மிரட்டுதல் —

குண்டர் குழுக்கள் வாக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் கூச்சலிட்டவாறு வேலிகளால் பாய்ந்தனர்

## சுற்றிவளைப்பில் சிக்கியவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

"நேற்றுக்காலை 9 மணியில் இருந்து பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு அருகில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற அகோரத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து படையினர் கூச்சல் போட்டுக் கொண்டு வேலிகளால் பாய்ந்தும், அவற்றை முறித்துக் கொண்டும் ஓடினார்கள்"

பண்டத்தரிப்பில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த க. ஆறுமுகதாஸன் என்பவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நேற்றுக்காலை 9 மணியளவில் தோட்டத்துக்கு இறைப்பதற்கு வாட்டர்பம்முடன் சென்ற என்னை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியடியில் படையினர் தடுத்து நிறுத்தினர்.

என்னை விசாரித்து எனது வீட்டுக்கு அழைத்துச் சென்ற இராணுவத்தினர் வீட்டில் இருந்த எனது சகோதரி அவரது கணவன் ஆகியோருடன் என்னை தடுத்து வைத்தனர். பின் கல்லூரி பாதுகாவலரையும் அழைத்து வந்து எம்முடன் தடுத்து வைத்தனர்.

சாப்பாடு இன்றி நின்ற எமக்கு குடிக்க தண்ணீர்கூடத் தர மறுத்து விட்டனர்.

எம்மைத் தடுத்து வைத்த படையினர் தப்பியோடி இருந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



# பொதுஜன ஐக்கியமுன்னணி 120 ஆசனங்களைகைப்பற்றும்

## புலனாய்வு மற்றும் அரச அதிகாரிகள் குழு கணிப்பு

கொழும்பு, ஜூலை 22

புலனாய்வு அதிகாரிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினால் 18 மாவட்டங்களில் நடத்தப்பட்ட கணிப்பின்படி, எதிர்வரும் பொதுத் தேர்தலில் மொத்த 196 ஆசனங்களில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 110 முதல் 120 க்கு இடைப்பட்ட ஆசனங்களைக் கைப்பற்றும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களாக நடத்தப்பட்ட இக் கணிப்பில் 38 அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம், பதுளை, கொழும்பு, திகாமடுல்ல, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, குருணாகல, மாத்தளை, நுவரெலியா, பொலன்னறுவ, இரத்தினபுரி புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்தக் கணிப்பு நடத்தப்பட்டது.

அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாத் திண்டாட்டம், ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை, இளைஞர்கள் காணாமற்போனமை, லஞ்சம், ஊழல் ஆகியவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியை உறுதிப்படுத்தும் சாதகமான அம்சங்கள் என்று இந்த அதிகாரிகள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் சிக்காகோ பேருரையின் நூற்றாண்டு விழா கருத்தரங்குச் சிறப்புமலர்

22-07-94



## சமர்ப்பணம்



வணக்கத்துக்குரிய
ஸ்ரீ மத்
பூதேஷானந்தர்
மகராஜ்
(உலகளாவிய பெருந்
தலைவர் ஸ்ரீராம
கிருஷ்ண மடம்,
மிஷன், பேலூர் மடம்
கல்கத்தா)

இவர்களின்
திருவடியில் இம்
மலரை
சமர்ப்பிக்கின்றோம்

## சுவாமி ஆத்மகனானந்தஜீயின் வாழ்த்துச் செய்தி

இராமகிருஷ்ண மிஷன்,
கொழும்பு:
15 - 07 - 1994

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சொற்பொழிவு நூற்றாண்டையொட்டி, பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், யாழ்ப்பாணத்தில் பல நிகழ்ச்சிகளைக் கடந்த ஒரு வருடமாக நடத்தி வருவதை மக்கள் அறிவர்.

எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் யாழ்ப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையின் முழு பங்களிப்புடன், சுவாமி விவேகானந்தரின் சமய சமூக, கல்வி சிந்தனைகளையொட்டி ஒரு கருத்தரங்கையும், புத்தகக் கண்காட்சி ஒன்றையும், சாரதா சேவாச்சிரமம் நடத்தவிருப்பதையறிந்து மிக்க மகிழ்ச்சி.

ஆண்மையும், தன்னம்பிக்கையும் அளிக்க வல்ல சுவாமி விவேகானந்தரது கருத்துக்கள் இளைய தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க்கையை வளம்படுத்த வல்ல கருத்துக்கள் அடங்கிய புத்தகங்களை வாசித்துப் பயன்பெற.

## வேற்றுச்சமய நெறிகளை வெறுக்காது மதிக்கும் பண்பு கொண்டது இந்துமதம்

### விவேகானந்தர் உலகத்துக்குக் கூறிய செய்தி

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே!
சகோதரர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற இப்பொழுது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தில் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்களின் பெயரால் நன்றி கூறுகிறேன்.

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப்பற்றிக் குறிப்பிடும்போது, "வேற்றுச்சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச்சென்ற பெருமை தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத்தான் சாரும்" என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்துக்குப் புகட்டிய சமயத்தைச் சேர்ந்தவன் என்பது குறித்து நான் பெருமையடைகிறேன். எதையும் வெறுக்காது மதிக்க வேண்டும் என்கிற கொள்கையை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மையானவையே என்று ஒப்புக்கொள்கிறோம்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும், அனைத்துச் சமயங்களாலும் கொடுமைப்படுத்தப்பட்டவர்களுக்கும், நாட்டைவிட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடம் அளித்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் பெருமைப்படுகிறேன். உரோமானியரின் கொடுமையால், தங்கள் புனிதத் திருக்கோயில் சிதைந்து சீரழிந்த அதே வருடமே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களில் எஞ்சி நின்றவர்களை இதயமாரத் தழுவிக்கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். சிறந்த சொராஸ்திரிய சமயத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலம் அளித்து இன்னும் பேணிக் காத்து வருகிற சமயத்துக்கு உரியவன் என்று பெருமை கொள்கிறேன்.

என் அருமைச் சகோதரர்களே! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப் பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள் தோறும் இன்னும் தொடர்ந்தும் ஓதப்பட்டு வருவதுமான தோத்திரத்தின் ஒரு சில வரிகளை இங்கு உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்கமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்கு அவைதான் எம்பெரும சற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ!

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில், மிகமிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இப்பேரவை, கீதையில் உபதேசிக்கப் பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை உலகத்துக்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். "யார் எவ்வழியைப் பின்பற்றி என்னை அடைய முயன்றாலும், நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள். எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன".

பிரிவு மனப்பான்மை, மூடநம்பிக்கை இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி. இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன. வன்முறையை நிரப்பியுள்ளன; அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து நாகரிகத்தை அழித்து எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச்செய்து விட்டன. இந்தப் பயங்கர பைசாசக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின் மனித சமுதாயம் இன்றிருப்பதைவிடப் பன்மடங்கு உயர்நிலை எய்திருக்கும்.

ஆனால் அவற்றுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் தொடக்கத்தைக் குறிப்பிட ஒலித்த மங்களமணி எல்லா மத வெறிகளுக்கும், வாளாலும் எழுதுகோலாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும் ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகட்டும் என்றுதான் ஆர்வமுடன் வேண்டுகிறேன்.

### இன்றைய கருத்தரங்கு நிகழ்ச்சிகள்

★ யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

★ மு.ப. 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை முதலாவது அமர்வு

★ தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்

★ சிறப்பு விருந்தினர்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (கலைப்பீடாதிபதி)

★ ஆய்வுரைகள்:
திருமதி நா. செல்வநாயகம்
திரு எம். வேதநாதன்

★ பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை இரண்டாவது அமர்வு

★ தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்

ஆய்வுரைகள்:
திருமதி க. இராமநாதன்
சுவாமி சித்ரூபானந்தா

★ கலைநிகழ்ச்சிகள்:
வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்.

### நாளை (23-7-94) புத்தகக் கண்காட்சி

★ காலை 8 30 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

★ யாழ். பல்கலைக்கழகத்துக்கு நாம் அடையாள அன்பளிப்பு — துணைவேந்தர் பேராசிரியர் க. குணராசா திடம் சுவாமி சித்ரூபானந்தா கையளிப்பார்.

★ பொதுமக்கள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை புத்தகக் கண்காட்சியை பார்வையிடலாம்.

## சுவாமி விவேகானந்தர் நினைவு நீடு நிலைக்கும்

சிக்காகோ நகரிலே அன்று சிங்கம் ஒன்று கர்ஜித்தது. உலகமே அவ்வொலி கேட்டு விழித்துக் கொண்டது. ஆம்! சுவாமி விவேகானந்தரை பற்றியே இங்கு குறிப்பிடுகின்றோம்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மையாலே
துங்கமிகு நெறி பலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றினாலும்
அங்கு அவைதான் எம்பெரும! சற்றில் உனை
அடைகின்ற ஆறேயன்றோ!

"யார் எவ்வழியில் பின்பற்றி என்னை அடைய முயன்றாலும் நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள். எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன"

சுவாமிகள் கூறியது போல மார்க்கங்களோ பல,

இறைவன் ஒருவனே என்பதனை அன்றுதான் உலகம் உணரத் தொடங்கிற்று.

இவ்வுயரிய கருத்தைப் பரப்பி வருவதே ஸ்ரீராமகிருஷ்ண மிஷன்.

இக்கூர உபதேசம் எத்துணை உண்மை வாய்ந்தது என்பதனை உலகெங்கணும் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் விளக்கி மண்ணுலகினர் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டி வருவது ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் 1897 இல் சுவாமி விவேகானந்தரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மிஷன் இன்று உலகனைத்தையும் அரவணைத்து நிற்கும் பேரவையாகத் திகழ்கின்றது.

இலங்கையிலே இந்த மிஷன் செய்து வரும் சேவை அளப்பரியது. குருதேவரின் நேரடி சீடரான சுவாமி ஸ்ரீ சிவானந்தரின் வருகையுடன் எமது வாழ்க்கையிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனை மையமாகக் கொண்டு பல மாற்றங்கள் ஏற்பட்டன. மிஷன் ஆற்றிய பணியின் பிரதிபலிப்பே இவை.

இப்போது இலங்கைக் கிளையின் தலைமையை சுவாமி ஆத்மகனானந்தாஜி மகராஜ் ஏற்றிருக்கின்றார். சகல இனத்தினரையும் தன் அன்பினாலும் நற்பண்பினாலும் வசீகரிக்கும் விசால உள்ளம் கொண்டவர் இவர். சுவாமி ஜீவானந்தாஜி, சுவாமி அஜராத்மானந்தாஜி ஆகியவர்கள் உறுதுணையாய் நின்று சுவாமி விவேகானந்தரின் திவ்விய சிந்தனைகள் எங்கும் பரவ உதவி வருகின்றனர். இன்றைய உலகில் தோன்றியிருக்கும் சகல பிரச்சினைகளுக்கும் அருமருந்து சுவாமிகள் தரும் தெய்வீக ஒளஷதமே.

ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷனின் சேவை மேலும் வளரட்டும் என்பதே சகல மக்களினதும் பிரார்த்தனை

நன்றி: ஆசிரியர் தலையங்கம்,
தினகரன்.

11 - 09 - 1993



சிக்காகோவில் இளம் வீரத்துறவி விவேகானந்தர்

## நம்பிக்கையே மகிமையின் இரகசியம்

★ எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். பண்டைய மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன. புதிய மதம் தன்னம்பிக்கையில்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்லுகிறது.

★ தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உன்னே இருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவுகடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாத போதுதான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.

★ நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை — இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும். உங்கள் முப்பத்து மூன்று கோடிப் புராண தெய்வங்களிடத்தும் மேலும் அவ்வப்போது உங்களிடையே அன்னிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் நம்பிக்கை இருந்து, ஆனாலும் உங்களிடத்தே நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்குக் கதி மோட்சமில்லை. — விவேகானந்தர்

## இந்து மத வளர்ச்சிக்கு உத்வேகம் தந்த மிஷன்

துறவும் தொண்டுமே மனித சமுதாயத்தை நெறிப்படுத்தும் சீரிய இலக்குகளாகக் கொண்டு 1897 ஆம் ஆண்டில் சுவாமி விவேகானந்தர் ராமகிருஷ்ண மிஷனை ஆரம்பித்தார். சுவாமி விவேகானந்தர் சமய சமரசத்தை நிலைநாட்டிய மகான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் (1836 — 1886) இன் பிரதான சீடராவார். ராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் அதன் இல்லற உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் ஆதுலர்களுக்கும், பொருளாதார நலம் குன்றியவர்களுக்கும் மற்றும் துன்புறுபவர்களுக்கும் இன, மத வேறுபாடு எதுவுமின்றி அவர்களை தெய்வீக உருவங்களாகவே கருதிச் சேவையாற்றி வருகிறார்கள்.

சர்மதப் பேரவையில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சொற்பொழிவுகளைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் அவரது உரையைக் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் விளைவாக, இலங்கையிலும் ஒரு மிஷனை ஆரம்பித்து வைக்கும்படி பலர் வேண்டுகோள் விடுத்தனர். குருதேவரின் நேர்ச் சீடரான சுவாமி சிவானந்தர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். சுவாமி சிவானந்தரின் ஆன்மீக ஞானமும் பக்தி நிறைந்த சேவைகளும், வேதாந்தத்திலும் சனாதன தர்மத்திலும் புதிதாக ஓர் உத்வேகம் ஏற்பட வழிவகுத்தன.

இலங்கையில் முதன்முதலாக, ராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்த துறவியாக வாழ்ந்தவர் சுவாமி விபுலானந்தரேயாகும். இவர் முன்னோடியாக அமைந்து மாணவர் இல்லத்தைத் தாபித்ததுடன் 23 பாடசாலைகளையும் நடத்தினார். இக்கல்விக் கூடங்கள் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, ஹுனுகலை, நம்பல காமம், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் ஈறாகப் பரந்தமைந்திருந்தன. யாத்திரிகர் விடுதியும் உண்டிச்சாலையும் 1953 — 1976 வரை ராமகிருஷ்ண மிஷன் கொடியின் கீழ் கதிர்காமத்தில் இயங்கிவந்தது.

இன்று இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைமைப்பீடம் கொழும்பில் வெள்ளவத்தையில் இயங்கி வருகிறது இங்கு ஒரு தொடரான சமய கலாசார நிகழ்ச்சிகள், தலைமைத்துவப் பயிற்சி நெறிகள், கருத்தரங்குகள், ஆன்மீக சத்சங்கங்கள் மற்றும் அருளுரைகள் என பலவும் ஞாயிறு பாடசாலையும் நடைபெற்று வருகின்றன. மட்டக்களப்பிலுள்ள இதன் கிளை நிலையம் கிட்டத்தட்ட 230 சிறார்களை ஆதரித்து வருகின்றது. மூன்று மாணவரில்லங்களில் துரதிர்ஷ்டம் வாய்ந்த சூழ்நிலைகளில் அகப்பட்ட சாதாரணச் சிறார்கள் கௌரவமிக்க மனிதர்களாக வளர்வதற்கு இந்த மாணவரில்லங்கள் கைகொடுத்து நிற்கின்றன. அத்துடன் ஞாயிறு பாடசாலை, ஆன்மீக வகுப்புக்கள் அவ்வப்போது மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

★

### கௌரவிப்பு

சுவாமி விவேகானந்தரின் உருவப்பட கட்அவுட் தயார் செய்த திரு. சோ. ராமகிருஷ்ணன் (கிருஷ்ணா ஓவியங்கள் — பருத்தித்துறை) இன்றைய கருத்தரங்கு நிறைவில் கௌரவிக்கப்படவுள்ளார்.

**யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையின் பங்களிப்புடன் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தினரின் ஏற்பாடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட பகுதிக்கு கப்பல் மூலம்

# உணவுப் பொருள்களை அனுப்புவதில் இதுவரை எவ்வித மாற்றமும் இல்லை

### செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 22

"வடக்கிற்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்புவதில் எந்தவித மாற்றமும் இதுவரை செய்யப்படவில்லை"

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி டேரி பேர்கின்ஸ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகால சட்டவிதிகள் காலாவதியானதால் வடக்கே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பும் பொறுப்பு யாரிடம் உள்ளது என்பது குறித்து சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக வெளிவந்த செய்திகள் குறித்து கேட்டபோதே அவர் முன்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்:

"அவசரகால சட்டவிதிகள் காலாவதியான போதும் சிறைகளில் தொடர்ந்து கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அது போன்று — அவசரகால விதிகளின் கீழ் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்புவதிலும் மாற்றம் ஏற்படாது என நான் கருதுகிறேன். இது விடயம் தொடர்பாக அரசு எம்முடன் எதுவும் பேசவில்லை.

"வழமைபோல தொடர்ந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் வரும், தற்போதுள்ள நடைமுறையில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை." — என்றும் அவர் கூறினார். (எ-3)

## அனுமதி அட்டை சேர்ப்பப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 22

எதிர்வரும் முதலாம் திகதி நடைபெற இருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தர) பரீட்சைக்குதோற்றவிருக்கும் பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் செல்வி. தி. பெரியதம்பி இத்தகவலை தெரிவித்தார். (உ-4)

## கம்பன் விழா 3ஆம் நாளில் செந்தமிழ் நாடாளுமன்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் மூன்றாம் நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு செந்தமிழ் நாடாளுமன்றம் என்னும் புதிய நிகழ்ச்சி இடம்பெறும்.

யாழ்ப்பாணம் வலயம் 2 இன் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. கோ. சி. வேலாயுதம் தலைமையுரையையும், வடமராட்சிக் கம்பன் கழகத் தலைவர் கவிஞர் திரு. மன்னவன் கந்தப்பு தொடக்கவுரையையும், திரு சி. சரவணபவன் ('சிற்பி') வாழ்த்துரையையும் நிகழ்த்துவார்கள்.

இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர் சபாநாயகராகப் பணிபுரிய "தமிழின் தலைமைக் கவிஞர் என்ற பதவி வழங்கப்பட வேண்டியது கம்பனுக்கே" என்ற பிரேரணையை ஒட்டியும் வெட்டியும் செந்தமிழ் நாடாளுமன்றத்தில் பல அறிஞர்கள் வாதம்புரிவார்கள்

4-30 மணி முதல் நடைபெறும் மாலை நிகழ்ச்சிகளில் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையுரையையும், வட இலங்கை சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு தொடக்கவுரையையும், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன் வாழ்த்துரையையும் நிகழ்த்துவார்கள்.

சங்கீத பூஷணம் எஸ். திலகநாயகம் போல் கம்பன் இசையமுது வழங்குவார்.

இறுதியாக "சூர்ப்பனகை சார்பாக மானநஷ்டம் கோரல்" வழக்காடு மன்றம் நடைபெறும். திரு. இ. ஜெயராஜ் நீதிபதியாகப் பணி புரிவார். (க-111)

## பிரேமாவுக்கு நடந்தது சந்திரிகாவுக்கு நடந்தால்..?

கொழும்பு, ஜூலை 22

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு நடந்தது போன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம் ஒன்று சந்திரிகாவுக்கு ஏற்பட்டால் அதனால் பொது மக்கள் ஐக்கிய முன்னணித் தலைமைப் பீடத்தில் ஏற்படும் இடைவெளியை யார் நிரப்புவார்?

அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட மிதவாதத் தலைவர்களை மேற்கோள் காட்டி இக்கேள்வியை எழுப்பியிருக்கிறது.

சந்திரிகா திடீரென்று நாட்டை விட்டு வெளியேறினால் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் அமைப்பில் மாற்றம் ஏற்படும்.

பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்ட போது ஆட்சி மாற்றம் அமைதியாக இடம் பெற்றது.

"சந்திரிகாவுக்கு அவ்வாறான துரதிர்ஷ்ட சம்பவம் இடம் பெற்றால் அமைதியான ஆட்சி மாற்றம் இடம் பெறுமா? பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைமைப் பீடத்தில் அதனால் ஏற்படும் வெற்றிடம் எப்படி நிரப்பப்படும் என்பது ஒருவருக்குமே தெரியாது உள்ளது"— என்றும் 'சண்டே ஒப்சேவர்' எழுதியுள்ளது. (இ-எ)

## படையினர் குடும்பங்கள் கவலை

வடக்கு- கிழக்கு யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரின் குடும்பங்கள் தங்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு அரசு உரிய நஷ்டஈட்டை வழங்கவில்லை என்று கண்டியில் உள்ள ஐக்கிய இலங்கை இராணுவச் சிப்பாய்கள் அமைப்பிடம் முறையிட்டுள்ளன. (எ)

### சர்ச்சைக்குரிய எழுத்தாளர்

## நஸ்றினுக்கு அரசியல் தஞ்சம்; மேற்கு நாடுகள் விருப்பம்

பொன், ஜூலை 22

இஸ்லாமை நிந்தனை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பங்களாதேஷைச் சேர்ந்த 38 வயது பெண் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்றினுக்கு அரசியல் தஞ்சம் அளிக்க ஐரோப்பிய கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் நாடுகள் முன் வந்துள்ளன.

ஜேர்மன் அரசு இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ஐரோப்பியக் கவுன்ஸிலின் நடப்புத் தலைமைப் பதவியை தற்போது ஜேர்மன் வகித்துவருகிறது:

'லஜ்ஜா' என்ற நூலை எழுதி குர்ஆனை அவமதியாதை செய்ததன் மூலம் தெய்வ நிந்தனைக் குற்றச்சாட்டுக்கு இலக்கான நஸ்றினை கைது செய்யும்படி கடந்த மாதம் டாக்கா நீதிமன்றம் உத்தரவிட்டது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து அவர் தலைமறைவாகி வாழ்கின்றார்.

டாக்காவில் அமெரிக்கத் தூதரகத்தில் அவர் தலைமறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

பொன்னில் உள்ள பங்களாதேஷ் தூதர் ஜேர்மன் வெளியுறவு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு, ஐரோப்பிய கவுன்ஸிலின் முடிவு தெரிவிக்கப்பட்டது

"நஸ்றினுக்கு பாதுகாப்பளிக்க பங்களாதேஷ் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நஸ்றின் விரும்பினால் அவரை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டும்"— என்று ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் பங்களாதேஷ் தூதரிடம் கேட்டுக் கொண்டார். (ட-எ)

## ஒத்திவைப்பு

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இன்று முதல் நடைபெறவிருந்த மாபெரும் கலைஞரின் தொல்பொருள் கண்காட்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அந்தக் கண்காட்சி எதிர்வரும் 28ஆம் 29ஆம் 30 ஆம் திகதிகளில் அங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (ஐ-க-117)

# பத்து வருடங்களுக்கு முன்னரே பிரபாகரன் ஈழம் பெற்று விட்டார்

### சந்திரிகா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 22

"10 வருடங்களுக்கு முன்னரே பிரபாகரன் ஈழத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார். நாங்கள் எவரும் வவுனியாவுக்கு அப்பால் செல்ல முடியாத நிலையில் இருக்கிறோம்."

— இப்படிக் கூறியுள்ளார் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதி தலைவியான சந்திரிகா குமாரணதுங்க.

நித்தம்புவவில் நடைபெற்ற முன்னணியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

இந்நாடு பிளவுபடுவதற்கு எக்காரணம் கொண்டும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறிவருகிறார்.

ஆனால் பிரபாகரன் பத்து வருடங்களுக்கு முன்னரே ஈழத்தைப் பெற்றுக் கொண்டு விட்டார்.

"நாம் பதவிக்கு வந்தால் சிங்கள பௌத்தர்களின் உரிமைகளை பாதுகாக்கும் அதேவேளை தமிழ், முஸ்லிம் சிறுபான்மையோரின் உரிமை[illegible] பேணும்" — என்றார். (உ-3)

## நியமனம் தராவிட்டால் தற்கொலை செய்வேன்

### வேட்பாளர் ஒருவர் பயமுறுத்தல்!

கொழும்பு, ஜூலை 22

ஆளும் ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் எம். பி. ஒருவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட தமக்கு மீண்டும் நியமனம் தராவிட்டால், தற்கொலை செய்து கொள்ளப் போவதாக பயமுறுத்தினராம்.

வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர் முகப் பரீட்சையின் போது, அவர் முன்கண்ட பயமுறுத்தலை விடுத்தார் என்றும் —

ஸ்ரீகோதா அலுவலகத்தில் இது அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யார் அந்த முன்னாள் எம். பி.? பயமுறுத்தலை அடுத்து அவருக்கு மீண்டும் போட்டியிட அனுமதி வழங்கப்பட்டதா என்ற விவரங்களை "சண்டே லீடர்" வெளியிடவில்லை. (இ-எ)

---

உ
சிவமயம்
சித்தன் கேணி

## சிவகாமி சமேத சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்

## மகா சங்காபிஷேக திருக்கல்யாண விஞ்ஞாபனம்

காலம்: **22-07-1994** வெள்ளி
காலை 8மணி முதல் சங்காபிஷேகம்
மாலை 7மணி முதல் திருக்கல்யாணம்

பாராட்டு விழா
இரவு 9மணி முதல்

சிவன் தேவஸ்தானத்தில் தொடர்ந்து பல வருடங்களாக திருக்கல்யாண வைபவத்தில் நாதஸ்வரகானம் வழங்கி வரும் நாதஸ்வர இரட்டையர்கள்

வி. கே. கானமூர்த்தி,
வி. கே. பஞ்சமூர்த்தி
அவர்களுக்கும்
தவில் மேதை நாச்சிமார் கோயிலடி
கணேசபிள்ளை புதல்வன்
கே. சிவகுமார்
அவர்களுக்கும்
தேவஸ்தானத்தினரால் பொற்பதக்கம் அணிவித்து பொன்னாடை போர்த்திப் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளது.

ஆசி வழங்கும்
பஞ்சரத்தின குருமணிகள்:

★ சிவாச்சாரிய கலாநிதி
சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் அவர்கள்
(சர்வதேச இந்துமத குரு - Australia)

★ பேராசிரியர் சிவஸ்ரீ க. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் (Australia)

★ சிவாகம கலாநிதி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள் (Switzerland)

★ ஸ்ரீ ஐயப்பதாசன் சாம்பசிவ சரவணபவகுருக்கள் அவர்கள் (அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி Colombo)

★ கிரியாகலாப முத்தாமணி
சிவஸ்ரீ சோ. நடராஜக்குருக்கள்
(கருவில் ஐயனார் தேவஸ்தானம்)

வேதபாராயணம்:
பிரம்மஸ்ரீ சபா. உமாபதி சர்மா - தேவஸ்தானம்

விழாத்தலைவர்:
சிவாகம வித்யா ஜோதி
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள்
(புன்னாலைக் கட்டுவன்)

பாராட்டுவோர்:
சிவாச்சாரிய கலாநிதி பூரண
தியாகராஜக்குருக்கள் B. A. (Hons. Cey)
வியாகரண சிரோன்மணி
(அண்ணாமலை சர்வகலாசாலை)

வேதாகம ஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ தா மகாதேவக் குருக்கள்
(தர்ம சாஸ்த குருகுலம் - இணுவில்)

பிரம்மஸ்ரீ Dr ம. கோபாலகிருஷ்ண சர்மா
(தலைவர் - இந்து நாகரிகத்துறை யாழ். பல்கலைக் கழகம்)

இயலிசை வாரிதி பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர்

பிரம்மஸ்ரீ சிவானந்தசர்மா
(கோப்பாய் சிவம்)

பிரம்மஸ்ரீ இ. சதாசிவசர்மா
(தலைமை ஆசிரியர் - யாழ். சிவானந்தகுருகுலம்)

பரிசளிப்பு விழா:
இரவு 10-30 மணி முதல்
தேவஸ்தானத்தால் நடாத்தப் பெற்ற சைவ சமயப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

நன்றியுரை;
பிரம்மஸ்ரீ சபா. வாசுதேவசர்மா-தேவஸ்தானம்

பக்திகானம்:
இரவு 11-30 மணி முதல்

### திரு S. G. சாந்தன் குழுவினர்

அனைவரும் வருகை தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்.

மங்களம்!

— தேவஸ்தானம்,

[சி-8714]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மேசை, கதிரை செற்றி, அலுமாரிகள், அழகு சாதன கண்ணாடி மேசை, டைபல் மெஷின், சோக்கேஸ், கடைக்குரிய கவுண்டர் மேசை, சாப்பாட்டு மேசை, சொப்பர் சைக்கிள் ¾ சைக்கிள் வாங்கு விருல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [32006]

வீட்டுத் தளபாடங்கள், சாய்மனை கதிரை, ஸ்பிறிங் கட்டில் விற்பனைக்கு உண்டு. ப. ரவிசங்கர், இல. 16/2, சீனியர் ஒழுங்கை, கட்டி: (32026)

## புலமைப் பரிசில் பரீட்சை

Bond நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்கள் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். கணிதம், தமிழ் விடைகளுடன் ரூபா 10/- மட்டும். [7445]

## தேவை

யாழ் மாநகரசபை எல்லைக்குள் சிறிய குடும்பம் வசிப்பதற்கு தனிவீடு அல்லது அனெக்ஸ் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல: 672, பே/பா உதயன், யாழ்ப்பாணம். (32014)

# கூட்டுறவு அபிவிருத்தி நிலைய பதவிகள் வெற்றிடம்

யாழ்ப்பாணம் ஜூலை 22

வடக்கு கிழக்கில் கூட்டுறவு அபிவிருத்திக்கு பொறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் தேசிய கூட்டுறவுச்சபையின் குருநகர் பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி நிலையத்தின் அதிபர் பதவி சென்ற சனிக்கிழமையில் இருந்து வெற்றிடமாக உள்ளது.

இங்கு அதிபராகக் கடமையாற்றி வந்த திரு. ந.குமரேச பசுபதி சென்ற சனிக்கிழமை ஓய்வு பெற்றதை அடுத்து இவ்வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இவரின் இடத்திற்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்படும் வரை இந்நிலையத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. இ. சுப்பிரமணியம் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை இங்கு எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர் விரிவுரையாளருக்கும் வெற்றிடங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (இ-4)

# பொன்னாடை போர்த்தி கௌரவம்

யாழ்ப்பாணம்' ஜூலை 22

குட்டிப்புலம் அ.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் நடத்தப்பட்ட கலை விழாவின் போது 'இந்த மண் எங்கள் சொந்த மண்' புகழ் எஸ். ஜி சாந்தன் அரியாலையூர் நடிக கலாமணி வி. செல்வம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

# ம. ஐ. மு. தேசிய பட்டியலில் முன்னாள் எம். பி.

கொழும்பு. ஜூலை 22

மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியவேட்பாளர் பட்டியலில் முதலாவது இடம் திரு எஸ். எல். குணசேகராவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில், சுதந்திரக் கட்சியின் தேசிய வேட்பாளர் பட்டியல் மூலம் எம்பியாக இவர் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. கருத்து வேறுபாடு காரணமாக இவர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பண்ணிரு சுதந்திரக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்தார். (எ)

உ

வேலும் மயிலும் துணை



நீர்வேலி

# அருள்மிகு செல்லக்கதிர்காம கோயில் தேர்த்திருவிழா

**23 — 07 — 1994**

சனிக்கிழமை நடைபெறும்.

வசந்த மண்டபப் பூசை காலை 8-45 மணிக்கு

தேரேறும் நேரம்: 10-45 மணி

தேர்இறங்கும் நேரம்: பகல் 1-00 மணி

விசேட மேள நாதஸ்வரக் கச்சேரிகள்:

P. K. பஞ்சமூர்த்தி குழுவினர் - கைதடி,
M. K. பத்மநாதன் குழுவினர் - அளவெட்டி,
V. K. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர் - கோண்டாவில்.

இடம்பெறும்

கிருஷ்ணபிள்ளை குடும்பத்தினர்,
உபயகாரர்.

நீர்வேலி. [32009]

# யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு

காலம்: — 22 - 07 - 94ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 3-00 மணி

இடம்: — குமாரசுவாமி மண்டபம்

கருத்துரை I — உள்ளூராட்சி அமைப்புகளும் தற்போதைய நிலையும்.

வழங்குபவர் — திரு. க. பரமேஸ்வரன் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்

கருத்துரை II — சர்ச்சைக்குரிய கச்சதீவு- ஓர் கண்ணோட்டம்

வழங்குபவர் — திரு: குசை ஆனந்தன் விரிவுரையாளர், புவியியற்றுறை யாழ். பல்கலைக்கழகம்.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்.
யா. இ. க. ப. மா. ச.

விளம்பர அன்பளிப்பு:

## அன்பு அழகுச் சோலை

அன்பளிப்புப் பொருள்கள்
வெப். சேர்ணல் சந்தோசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ/8772)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை சிவமூர்த்தி

(மகாலிங்கம் சதீஸ்வரன்)

(8ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

வீரப்பிறப்பு: 19 — 08 — 1973

வீரச்சாவு: 22 — 07 — 1991

கட்டைக் காட்டில் பகைவர்களையழித்த - நீ
கடுகளவும் பயமின்றி காட்டினாய் வீரம்
செட்டைக்குள்ளிருந்து பிரிந்த சசியே - நின்
புகழ் எட்டுத்திக்கும் எதிரொலிக்கும்.

இவருடன் தமிழ் மண்ணுக்காக மரணித்த மாவீரர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்.

தற்காலிக விலாசம்:
23, நாயன்மார் வீதி,
(கச்சேரி நல்லூர் வீதி)
யாழ்ப்பாணம். (32040)

# தீவுப்பகுதிகளில் ஈ. பி. டி. பி. பிரசாரம்

கொழும்பு, ஜூலை 22

யாழ். மாவட்டத்தில் தீவுப் பகுதிகளில் தனது தேர்தல் பிரசாரத்தை ஈ. பி. டி. பி. அடுத்த வாரம் ஆரம்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகவலை ஈ. பி. டி. பி. பேச்சாளர் ஒருவர் லங்காதீப நாளிதழுக்குத் தெரிவித்தார். (எ)

# A/L 96

தூய - பிரயோக கணிதம்

**திரு. கிருஷ்ணா**

சனி, ஞாயிறு காலை 6மணி

தாவரவியல்

**திரு. பொ. ஐங்கரநேசன்**

சனி, ஞாயிறு பிற்பகல் 2மணி

**ஆரம்பம்: 23-07-1994**


## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[இ-8641]

# பத்தாவது வருட நினைவஞ்சலி

தோற்றம்: 09 — 04 — 1956



மறைவு: 22 — 07 — 1984

## அமரர் து. பஞ்சலிங்கம்

(மனோ மாஸ்டர்)

உன் உரம் கொண்ட ஓரேயொரு குறிக் கோளும்
உருக்குலைந்த போது உணர்விழந்தோம்
மௌனத்தின் கல்லறைக்குள் உயிர்
நிலைத்தது எமக்கு
துடி துடித்த நெஞ்சில் தூங்க மறந்த உண்மைகள்
மௌனம் கொள்ள மறுத்ததனால்
உயிர் பிரிந்து உன் உடல் துவண்டு
எம் மனம் பனித்தது.


உற்றார், உறவினர்,
நண்பர்கள்

கொம்மர்தறை,
வல்வெட்டித்துறை.

(32008)

# 33ஆம் நாள் நினைவு மலர்

மலர்வு: 22 — 07 — 1917



உதிர்வு: 20 — 06 — 1994

## சுப்பிரமணியம் ஐயாத்துரை

(திருகோணமலை பிரித்தானிய கடற்படை களஞ்சிய பொறுப்பாளரும், யாழ்ப்பாண அரச தொழிற் திணைக்கள உத்தியோகத்தரும்)

எங்கள் குடும்பத் தலைவனின் இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும், கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (22-07-94) வெள்ளி எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன வைபவத்திலும் பங்குபற்றுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மகன், மருமகள்,
மைத்துனர்.

நீதிமன்ற வீதி, மல்லாகம். (7276)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## எழுமின், செயல்மின்

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சமயப் பெருவிழா பேருரையின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இப்போது உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. உலகின் பல பாகங்களிலும் உள்ள இராமகிருஷ்ண மடாலயங்கள் விவேகானந்தரின் சீரிய சிந்தனைகளை மக்கள் மத்தியில் விரைந்து பரப்பும் பணிக்கு இந்த வருடத்தை — 1993 செப்டம்பர் 11 ஆம் திகதி தொடக்கம் 1994 செப்டம்பர் 27 ஆம் திகதி வரையான ஒரு வருடத்தை — தக்கவாறு பயன்படுத்தி வருகின்றன.

அந்த வகையில் தமிழீழப் பகுதியின் பல பகுதிகளிலும் விவேகானந்தரின் சிக்காகோ பேருரை நூற்றாண்டு விழா நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. வருங்காலச் சந்ததியினரின் மனங்களில் விவேகானந்தரின் அரிய கருத்துக்களைப் பதிக்கும் நோக்குடன் பாடசாலைகள் தோறும் சிக்காகோ பேருரை நூற்றாண்டு நிகழ்வுகளை பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினர் நடத்தி வருகின்றனர். இந்த முயற்சி வரவேற்கப்பட வேண்டியதாகும்.

மனிதப் பிறவியின் முக்கிய நோக்கம் எங்கள் ஆத்மாவைத் தூய்மைப்படுத்தலாகும். அதற்கான பயிற்சி ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமானது. அந்த ஆத்ம பயிற்சி என்ன, அதனைக் கைக்கொள்வது எப்படி என்பதனைக் கூறுவதுதான் சமயம்.

சமயம், ஆலயம், வழிபாடு என்பன மனித வாழ்க்கையினின்றும் வேறுபட்டவை அல்லது புறம்பானவை அல்ல. சமயம் என்பது மனிதன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்வதற்காக வகுக்கப்பட்ட வாழ்க்கை நெறியேயாம். சமயம் நாளாந்த மனித வாழ்க்கையோடு இணைந்தது. மனதுக்கு அமைதி நல்குவதும் மதமே. அத்தோடு —

மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், ஆத்ம தூய்மை பெறவும் சமயங்கள் வழி காட்டுகின்றன. ஆதலால் மனிதர்கள் சமய தத்துவங்களையும் கோட்பாடுகளையும் அறிந்துகொண்டு தமது வாழ்க்கையை நடத்துவது அவசியமாகிறது.

இந்த வகையில், சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள், சிந்தனைகள் பேருதவி புரிகின்றன. அவரது கருத்துக்கள் எந்தக் காலத்துக்கும் பொருந்துவன.

சுவாமி விவேகானந்தர் மனித நேயத்தின் விழுமியங்களையே தமது அறிவுரைகளில் பரவலாகப் பொதித்திருக்கிறார். இன்றைய வாழ்க்கை நிலையில் உள்ளூரவும் சரி, உலகளாவிய ரீதியிலும் சரி, மனிதநேயமே பெரிதும் வேண்டப்படும் ஒன்றாக உள்ளது.

ஆகையால் இன்றைய சந்ததியினருக்கும், வருங்கால சந்ததியினருக்கும் விவேகானந்தரின் அறிவுரைகள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன.

நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவது, உலகிற்கு நன்மை செய்வதும் தான். நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும். ஆனால் உலகிற்கு நன்மை செய்வதனால் உண்மையில் நமக்கு நாமே தான் உதவி செய்து கொள்கிறோம் — என்று மனித நேயத்தை ஒவ்வொருவருக்கும் சார்பான முறையில், அவர்களைக் கவரும் முறையில் கூறியிருக்கிறார்.

அன்புதான் வாழ்க்கையாகும். வெறுப்பது ஒருவகை மரணம் என்று தான் சொல்ல வேண்டும் —

ஓர் இலட்சியத்துக்காக நீ உன் உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால் தான், நீ தலைவனாக முடியும் — என்பன போன்ற அவரது போதனைகள் இன்றைய காலத்துக்கும் பொருந்துவன.

எழுமின், விழிமின், செயல்மின் என்ற தாரக மந்திரம் எமது தமிழர் சமூகத்தின் உடனடியான முக்கிய தேவை. செய் அல்லது செத்துமடி என்ற கோட்பாடு இன்றைய தமிழனுக்கே மிகப் பொருத்தம்.

# ஆலயங்கள் மீது குண்டு வீச்சு நடத்தி தமிழர் கலாசாரத்தை அழிக்க முடியாது

## கம்பன் விழாவில் யாழ். ஆயர் முழக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

எங்கள் மண்ணில் உள்ள கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் எமது கலாசாரப் பொக்கிஷங்களை குண்டு வீசி அழிப்பதன் மூலம் எமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் அழித்துவிடலாம் என்று அரசினர் நினைக்கிறார்கள்.

கம்பராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் மூலம் எமது மனங்களில் எழுந்து நிற்கும் கலாசார, பண்பாட்டு உணர்வுகளையும் எமது வாழ்க்கையின் விழுமியங்களையும் அழித்துவிட முடியாது. இதனை அவர்கள் உணர்ந்து கொள்ளட்டும்.

இதே நிலை நீடிக்க வேண்டுமானால், இளைய தலைமுறையினரிடையே கம்பராமாயணம் போன்ற காவியங்கள் கூறும் பண்பாட்டு மரபுகள் விழுமியங்கள் பரப்பப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார்.

அகில இலங்கைக் கம்பன் கழகத்தினர் நடத்தும் கம்பன் விழா முதல் நாளன்று ஆசியுரை வழங்கிப் பேசுகையிலேயே ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

கம்பன்விழா முதல் நாள் நிகழ்ச்சி புதன்கிழமை மாலை நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் க. குணரத்தினம் தலைமையில் நடைபெற்றன.

விழா ஆரம்பமாவதற்கு முன்னர் கம்பனின் திருவுருவப் படம், கம்பன் கோட்டத்தில் இருந்து பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களின் மங்கள வாத்திய இசையுடன் விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

நல்லூர்ப்பகுதியைச் சேர்ந்த மாதர்கள் பூரண கும்பங்கள் ஏந்தி அணிவகுத்துவர சர்வோதயத்தொண்டர்கள் மலர் தூவ சர்வ மதத் தலைவர்களும், விழாவில் கௌரவிக்கப்படும் முதறிஞர்களும் மற்றும் கல்விமான்கள், பிரமுகர்களும் முன்செல்ல பெரும் எண்ணிக்கையானோர் ஊர்வலத்தில் பங்கு கொண்டனர்.

விழாவில் ஆசியுரை வழங்கிய யாழ். ஆயர் —

இன்றைய சந்ததியினர் மனங்களில் கலாசார பண்பாட்டு உணர்வுகள் உறைந்திருப்பது போல, வருங்கால சந்ததியினர் மனங்களிலும் பதிவதற்கு இதுபோன்ற விழாக்கள் அவசியம் — என்றும் வலியுறுத்தினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீன பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோரும் ஆசியுரை வழங்கினர்.

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரி பேர்கின்ஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் இலக்கிய விழாவாக மட்டுமன்றி சமூகத்துக்கும் பல்வேறு துறைகளில் பணிபுரிந்த முதறிஞர்களை கௌரவிக்கும் விழாவாகவும் அமைந்திருப்பது பெருமைக்குரியது. மனித நேயமும், தொண்டுள்ளமும், ஆற்றலும், ஆளுமையும் நிறைந்த அமரர் பேராசிரியர் துரைராசாவை "மகர யாழ்" விருதுக்குத் தெரிவு செய்ததை பாராட்டுகிறேன் — என்று செல்வி பேர்கின்ஸ் தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

முதறிஞர்கள் மு. ஞானப்பிரகாசம், நம. சிவப்பிரகாசம், கவிஞர் வே. ஐயாத்துரை, அருட்கவி சீ. விநாசித்தம்பி, வைத்திய கலாநிதி க. இராமசாமி, வரதர் ஆகியோருக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் பொன்னாடை போர்த்தி, விருதுகள் வழங்கி கௌரவித்தார்.

### "மகர யாழ்" விருது

அமரர் பேராசிரியர் துரைராசாவுக்கு மறைவுக்குப் பிந்திய "மகர யாழ்" விருது வழங்கப்பட்ட நிகழ்ச்சி முதல் நாள் விழாவுக்குச் சிகரம் வைத்தாற் போல அமைந்தது.

பேராசிரியர் துரைராசாவின் உருவப்படம் மண்டப வாசலில் இருந்து சங்கு முழக்க, குடை, கொடி ஆலவட்டம் சகிதம் மேடைக்கு எடுத்துவரப்பட்டு சிம்மாசனத்தில் வைக்கப்பட்டது.

"மகரயாழ்" விருதை அமரரின் புதல்வர்களான அரவிந்தன், கமலேஸ்வரன் ஆகியோர் தலைவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டனர்.

விருதைப் பெறுவதற்கு முன்னர் மைந்தர்கள் இருவரும் தமது தந்தையின் உருவப் படத்தைத் தொட்டு வணங்கிய காட்சி கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கானோர் நெஞ்சங்களை நெருடி கண்களில் கண்ணீர் பனிக்கச் செய்தது. அவரை அறிந்து கொண்டவர்களின் இதயங்கள் அந்த அவதார புருஷரின் உருவத்தை மனக்கண்ணில் நிறுத்தி மானசீகமாக வழுத்தின.

கவிதை பேச்சுப் போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. "சுகவிதை" நூலை பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் வெளியிட்டுவைத்தார். (ஆ- 111)

## ஆளும் ஐ. தே. க தேர்தலில் போட்டியிடும்

# நான்கு தமிழ் மாவட்டங்களில் புதிதாக 1,93,000 பேருக்கு உணவு முத்திரை

## மாதம் ரூபா. 1கோடி செலவு; அரசு அவசர நடவடிக்கை

யாழ்ப்பாணம். ஜூலை 22

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிடும் நான்கு தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த — சுமார் 1 லட்சத்து 93 ஆயிரம் பேருக்கு புதிதாக உணவு முத்திரை வழங்க அரசு திடீரென நடவடிக்கை எடுத்திருக்கிறது.

வடக்கு - கிழக்கின் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த 42ஆயிரத்து 287 குடும்பங்களுக்கே மாதாந்தம் ஒரு கோடி ரூபா செலவில் உணவு முத்திரை வழங்க அரசு அவசர நடவடிக்கை எடுத்திருக்கிறது.

புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூக சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த ஆலோசனையை ஏற்றே இந்த அவசரத் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது.

இந்த ஒரு லட்சத்து 93 ஆயிரம் பேருக்கும் இந்த மாதம் முதல் உணவு முத்திரை வழங்கப்படும். (உ)

## அரசு நிறுவனங்களை

# தனியார் மயப்படுத்துவதை அரசு நிறுத்த மாட்டாது

## பிரதமர் ரணில் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 22

தனியார் மயப்படுத்தும் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி அரசு தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

127 அரச நிறுவனங்களில் 41 நிறுவனங்கள் ஏற்கனவே தனியார் மயப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 14 அரச நிறுவனங்களை தனியார் துறையினரிடம் கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அரச தோட்டங்களும் தனியாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (எ-6)

## குடியிருப்புகள் விடயத்தில்

# தோட்டத் தொழிலாளரை ஐ. தே. க. ஏமாற்றுகிறது

## சு. க. பிரமுகர் கூறுகிறார்

மலையகத் தோட்டத் தொழிலாளருக்கு அவர்கள் வசிக்கும் குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் குண்டாகும்.

கொரணியகலை சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தனபால வீரசேகர தேர்தல் கூட்டம் ஒன்றில் முன்கண்டவாறு கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் என்று தொண்டமானை ஐக்கிய தேசியக்கட்சி நம்பவைத்துள்ளது இது ஒரு பகற்கனவாகும்.

அரசின் பெயரைப் பாதுகாக்க தொண்டமானும் இதனை நம்பி மேடைகளில் பிரசாரம் செய்து வருகின்றார் என்றும் அவர் கூறினார். (எ)

# விமானப்படைச் சிப்பாய் கத்திக் குத்துக்குப் பலி

## வவுனியாவில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 21

விமானப்படைச் சிப்பாய் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா தோணிக்கல் பகுதியில் இடம் பெறறுள்ளது.

சம்பவதினம் இரவு 10-30 மணியளவில் இவர் மது அருந்துவதற்காக ஒரிடத்துக்கு சென்றதாகவும் —

அங்கு இவர் சிலருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் —

அதையடுத்து இவர் கத்தியால் குத்தப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

பத்துக் கத்திக் குத்துக்காயங்கள் இவரின் உடலில் காணப்பட்டன.

இக்கொலை தொடர்பாக சுதா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (எ-5)

## மகாவலிப்பகுதியில்

# புதிய குடியேற்றவாசிகள் புலிகளுக்கு அஞ்சுகின்றனர்

## திட்ட அமைச்சர் வெளியிடும் கவலை

கொழும்பு, ஜூலை 22

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் 'பி' பிரிவில் குடியமர்த்தப்படும் சிங்களவர்களுக்கு விடுதலைப் புலிகளினால் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது.

மகாவலி அபிவிருத்தித் திட்ட அமைச்சர் எச். எம். ஏ. லொக்கு பண்டார கல முவவில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது முன்கண்டவாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்குப் பயப்படாது இப்பகுதியில் குடியமர புதிய குடியேற்றக்காரர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)

## கொள்ளுப்பிட்டிச் சம்பவம்:

# கோடீஸ்வரரின் மகனை கான்ஸ்டபிள் சுட்டார்

## மரணவிசாரணையில் தகவல்

கொழும்பு. ஜூலை 22

கொழும்பு இந்தியத் தூதரகத்தின் முன்னால் கடந்த ஞாயிறு அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கோடீஸ்வரர் ஒருவரின் மகன் என்றும் அவரைச் சுட்டவர் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் என்றும் மரண விசாரணையில் வெளியாகி உள்ளது.

உயிரிழந்தவர் குடிபோதையில் இந்தியத் தூதரகத்துக்கு முன்னால் கடமையில் இருந்த கான்ஸ்டபிள் சேனரத்தினாவின் ரைபிளைப் பறிக்க முயற்சித்த போது அந்தக் கான்ஸ்டபிள் தம்மைப் பாதுகாக்க சுட்டார் என்றும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (எ)

# பரீட்சை கட்டணம் செலுத்தலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைக்கான தமது விண்ணப்பக் கட்டணங்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரை யாழ். மாவட்டத்திலுள்ள தபாலகங்களில் செலுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 18 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

அவர்களின் விண்ணப்பங்கள் நேற்றுமுன்தினம் கொழும்பிலிருந்து வந்து திரும்பிய 'நரோமா' கப்பலில் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

## மணிவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகத்தின் மணிவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக கல்வியியற்துறையின் கல்விக் கழகத் தலைவர் திரு. கோ. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மணிவிழா மலர் வெளியீடு, வாழ்த்துரைகள், பொன்னாடை போர்த்தல், பாராட்டல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (உ-3-11)

# ஜெய்ப்பூர் நிறுவன விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி ஜெய்ப்பூர் அவயவப் பாவனையாளர்களுக்கான விளையாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

காலை 9-மணி முதல் சைக்கிள் ஓட்டம், மூன்றுசில்லு சைக்கிள் ஓட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும். பின்னர் பிற்பகல் 2 மணி முதல் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரிபேர்கின்ஸ் கலந்து கொள்வார்.

ஜெய்ப்பூர் அவயவப் பாவனையாளர்களின் திறமைகளை வெளிக்காட்டும் பல்வேறு நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறவுள்ளன. (ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

22 — 07 — 1994
வெள்ளி இரவு

- ★ 8. 01 — கலைமஞ்சரி — முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது "உலக உலா" சஞ்சிகையின் ஜூன், ஜூலை மாத வெளியீடு, அடுத்து சிறுகதை — "ஓ... மனிதர்களே" சிறுகதையை அடுத்து கவிதைகள்
  1. ஒளியை நோக்கி
  2. சமுதாய ஏட்டிலோர் சாதனை பதிப்போம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — அரசியல் அரங்கம் "இன்னமும் கலையாத ஏகாதிபத்தியக் கனவுகள்"
- ★ 8-50 — வாத்திய கானங்கள்

23 — 07 — 1994
சனி காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# மாஹோவில் வாளிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்திற்கு சுமார் 12 ஆயிரம் வாளிகள் 'மாஹோ' கப்பல் மூலம் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன. அந்த வாளிகள் விரைவில் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சமாசத்திற்கு சிறிய உழவு இயந்திரம் ஒன்றும் அந்தக் கப்பலில் வந்துள்ளது. (ஐ-17)

# பாலர் விளையாட்டு விழா

அளவெட்டி ஈஸ்வரன் பாலர் பாடசாலையில் விளையாட்டு விழா இன்று (வெள்ளி) பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ 100)

★ ★ ★

யாழ். பிறவுண் வீதி ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் மூன்றாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1-30மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்திலும் —

கோண்டாவில் விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் மூன்றாவது வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1-30மணிக்கு கோண்டாவில் இந்து ம. வியிலும் நடைபெறும். (உ)

# திருட்டு சைக்கிளை போட்டு விட்டு ஓடிய நபர்

தென்மராட்சி, ஜூலை 22

தேங்காய் எண்ணெய் பரல் கட்டிய சைக்கிள் ஒன்றைத் திருடிக் கொண்டு வந்த நபர் ஒருவர் நீதிமன்ற பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கண்டதும் சைக்கிளைப் போட்டு விட்டு தப்பி ஓடினாராம்.

இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரியில் இடம் பெற்றது.

இச்சைக்கிள் சாவகச்சேரி காவல் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-117)

# ஓவியப் பாடத் துறையிலுள்ள குறைபாடு நீக்க வேண்டும்

## கல்வி அதிகாரி உரை

"நுண்கலைத் துறையான ஓவியத் துறை பின்னடைந்து நிற்பதற்குக் காரணம் ஓவியப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் உபகரணங்களும் பற்றாக்குறையாக இருப்பதே ஆகும். இந்தக் குறையைநீக்க நாம் நடவடிக்கைகளைஎடுத்து எதிர்காலத்தில் இத்துறையில் பல சிற்பன்னர்களை உருவாக்க வழி வகுக்க வேண்டும்"

யாழ். கல்விவலயம் ஒன்றின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமறைக் கலாமன்ற கவின் கலைக் பயிலக மாணவரின் ஓவியக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்து அவர் உரை நிகழ்த்தினார்.

திரு. சிவானந்தன் மேலும் கூறியதாவது:

"எமது புதிய கல்விக்கொள்கையில் வேறு எந்த அழகியல் பாடங்களையும் விட அதிகப்படியான மாணவர்கள் சித்திரப் பாடத்தையும் பயிலுகின்றார்கள்"

ஓவியக் கண்காட்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து பேசிய யாழ் பல்கலைக்கழக இந்து இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவர் அருட்திரு. கலாநிதி ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் அடிகள் கூறியதாவது:

மமது நம் வாழ்வு "நிலைவும் போராட்ட நிலை, அரசின் பொருளாதார நெருக்கடி நிலை போன்ற பல்வேறு விஷயங்களை உள்வாங்கிக் கொள்ளும் எமது ஓவியர்கள் அவற்றைச் சித்திரங்களில் வெளிக் கொணர்வதை இத்தகைய ஓவியக் கண்காட்சிகளில் பார்க்க முடிகிறது. படைப்பாளிகளை அவர்கள் வாழும்காலத்திலேயே பாராட்டும் சூழல் எம்மிடையே தோன்றவேண்டும்" என்றார்.

ஓவியக் கண்காட்சி கடந்த 15, 16, 17ஆம் திகதிகளில் நடைபெற்றது. (க-51)

சீதனம் இன்றேல் திருமணம் இல்லை என்னும்
வேதனை வாழ்வை வேரோடு சாய்ப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ

சாவகச்சேரி டச்சு வீதி

## அருள் மிகு ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய

## 3 வது வருடாந்த ஸ்ரீ பழனி வேல் பவனி

ஆலய அலங்காரத் திருவிழாவின் 16 ஆம் திருவிழாவான நாளை (23-07-94) சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு ஆடி வேல் விழா ஆரம்பமாகும்.

★ அன்றைய தினம் ஸ்ரீ பழனி ஆண்டவருக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, மங்கள வாத்தியங்கள் சகிதம் கலை கலாசார நிகழ்ச்சிகள், பஜனைகளுடன் அலங்கரித்த முத்துச்சப்பறத்தில் கதிர்காம முருகப் பெருமானின் வேல் நகர்வலம் வரும் வைபவம் இடம்பெறும்.

★ சாவகச்சேரி நகரின் பிரதான வீதிகள் வழியாக இடம்பெறும் இத் திருவுலாவின் போது மெய்யன்பர்கள் அனைவரும் எம் பெருமானைத் தரிசித்து திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டி அழைக்கின்றோம்.

இங்ஙனம்

ஆலய பரிபாலனசபையினரும்

உபயகாரர்களும்

டச்சு வீதி,
சாவகச்சேரி.

(இ/8775)

---

## நீங்கா... நினைவுகள்...



படைப்பு: 28 — 05 — 1938

அழிப்பு: 24 — 07 — 1983

### அமரர் கந்தசாமி மயில்வாகனம்

(தட்டெழுத்து - சுருக்கெழுத்தாளர் மக்கள் வங்கி)

திதி; **22 - 07 - 1994**

மரணம் எனும் போர்வையுள்
நீங்கள் மறைக்கப்பட்டாலும்
எங்கள் மனம் எனும் கோயிலில்
என்றும் வீற்றிருக்கின்றீர்கள்.

நீங்கா நினைவுகளுடன்

குடும்பத்தினர், உறவினர்கள்

தனிகை
நெல்லியான் வீதி,
சுழிபுரம் மேற்கு.

(32044)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை

சாவகச்சேரி தபாற் கந்தோர் வீதியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி பொன்னுத்துரை நேற்று மாலை இறைபதமடைந்துவிட்டார்.

இவர் திரு இரத்தினம் பொன்னுத்துரை (இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமானந்தம், திருமதி புஸ்பரத்தினம் சிவராசரத்தினம், சதானந்தன் (ஸ்ரீவிஷ்ணு முகவர் சாவகச்சேரி), அருளானந்தம் (ஓய்வுபெற்ற லெப். கொமாண்டர் இலங்கைக் கடற்படை), விவேகானந்தன் (முன்னாள் பொலீஸ் திணைக்களம்), காலஞ்சென்ற புஸ்பரஞ்சினி, திருமதி புஸ்பராதா யோகநாதன் (பதுளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராசரத்தினம் (மார்க்கட் சாவகச்சேரி) செல்வராணி, தனேஸ்வரி, யசோதரா (முதன்மை ஆசிரியர் நடனம், தென்மராட்சி கல்விக் கோட்டம்), சிவம் யோகநாதன் (நெல் சந்தைப்படுத்தும் சபை, பதுளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன் விபுலன், வித்தியா, தீபா, வதனா, கோகுலன், ஜீவிகா, கோபி, லவன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. விவேகானந்தன்
(மகன்)

தபாற் கந்தோர் வீதி.
மகளிர் கல்லூரி அருகில்,
சாவகச்சேரி.

(32046)

### தம்பு பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பு பாலசுப்பிரமணியம் (ஆசிரியர்) நேற்று 21 - 07 - 94 காலமாகிவிட்டார்.

இவர் திருமதி அம்பிகா பாலசுப்பிரமணியத்தின் அன்புக்கணவரும் ஜெயலக்சுமி (அமெரிக்கா), ஜெயநந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசராசா (அமெரிக்கா), யோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சானா (அமெரிக்கா) திவ்வியா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (22- 07- 94) மு. ப. 11. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி அம்பிகா பாலசுப்பிரமணியம்
(மனைவி)

கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில்.

(32045)

---

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் வருமானமளிக்கும் விப்புத் திட்டத்தின் கீழ் தையல், கோலம், கேக் ஐசிங் முதலிய துறைகளில் பயிற்சி பெற்ற பெண்கள் நடத்தும் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9மணிக்கு நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் நடைபெறும் நல்லூர் பிரதேச செயலர் திருமதி சுமனா சிவசிதம்பரம் இதனை ஆரம்பித்து வைப்பார். (எ)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களின் பேச்சு, பக்திப் பாடல்கள் ஆகியன இடம்பெறும். தேவரையாளி இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. அ. விஜயநாதன் அறிமுகவுரையை நிகழ்த்துவார். (க)

★ ★ ★

சந்தரோடை விஜயானந்தன் பொது நூல் நிலையத்தில் புத்தகக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்களுக்கு நடைபெறும்.

கண்காட்சியை முதன்மை ஆசிரியர் திரு. ச. விநாயகரத்தினம் திறந்து வைப்பார். தொடர்ந்து திரு. செ. குணபாலசிங்கம் சிறப்புரை ஆற்றுவார். (ஒ-89)

★ ★ ★

புனித குரு பூரணை தினமாகிய இன்று சுன்னாகம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பஜனை நிலையத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

அதிகாலை 4 மணிக்கு நகர சங்கீர்த்தனமும், மாலை 5-30 மணிக்கு அஷ்டோத்திர பஜனையும், இடம்பெறும். தொடர்ந்து வட பிராந்திய சாயி நிறுவனங்களின் திவ்விய சாதனையான ''கோடி நாம லிகித ஜெயம்'' நடைபெறும். (ஐ)

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்டத்தில் தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் சகல மாணவர்களுக்கும் போதனாசிரியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று (வெள்ளி) முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஜ-க-117 81)

★ ★ ★

வலிதெற்கு பிரதேச சபையும், சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் முழு நிலா அறிவியற் கருத்தரங்கு இன்று பிற்பகல் 4 மணி முதல் சுன்னாகம் பெரிய மதவடி பொது நூலக மண்டபத்தில் நடைபெறும். இன்றைய கருத்தரங்கில் ''சோறு'' என்னும் தலைப்பில் யாழ். மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா கருத்துரையாற்றுவார். (ஐ)

★ ★ ★

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் மாதாந்த அமர்வு இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உறுப்பினர்கள் அனைவரையும் அதில் கலந்துகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

★ ★ ★

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு ''இறை அனுபவம்'' எனும் பொருளில் திரு. க. சிவராமலிங்கம் ஆசிரியர் சொற்பொழிவாற்றுவார். (க)

★ ★ ★

கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவை யொட்டி இன்று வெள்ளிக்கிழமை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை ஆலயத்தில் விசேட வழிபாடும் ஆராதனையும் இடம்பெறும். (இ-173)

★ ★ ★

இருபாலை தமிழ் மாமன்றத்தின் ஆதரவில் இலக்கிய முற்றம் நிகழ்வு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. மணிக்கு மன்றக் காப்பாளர் இருவை கவிஞர் திரு. எஸ். கே. ஜீவமோகன் தலைமையில் நடைபெறும். (க-30)

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடத்தப்படும் பௌர்ணமி தின இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சங்கீத பூஷணம் திருமதி மோகனாம்பிகை - கணேசனின் இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது. (க-51)

★ ★ ★

வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் பௌர்ணமி தோறும் நாவலர் தர்மகர்த்தா சபையின் ஆதரவில் நடைபெறும் சமய விரிவுரைத் தொடரில் இன்று வெள்ளி காலை 10 மணிக்கு திரு. மு. திராசராசா 'அன்புக்கோர் கண்ணப்பர்' என்னும் பொருளில் விரிவுரை நிகழ்த்துவார். (ஒ)

---

## படையினர்…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருணானந்தசிவம் பவளராணி (33 வயது) அவரது மகள் கிரிஜா (13 வயது), காராளசிங்கம் இராஜேஸ்வரி (56 வயது) தம்பிராசா நாகம்மா (40 வயது) இவர்கள் முள்ளையடியைச் சேர்ந்தவர்கள்.

காரையடிப் பகுதியில் காயமடைந்தோர் வருமாறு:-

ஜெயராசா சிவசக்தி (40 வயது), பொன்னுத்துரை கண்மணி (69 வயது), ஜே. நாகரத்தினம் (38 வயது).

காயமடைந்த அனைவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வடலியடைப்பு பிள்ளையார் கோவில் மடமும், மற்றும் நான்கு வீடுகளும், பிரான்பற்றில் நான்கு வீடுகளும், காரையடியில் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளன.

(ஒ-17-3-4-15)

---

## பண்டத்தரிப்பில்…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது

படையினரை இடைமறித்த விடுதலைப் புலிப் போராளிகள் உக்கிரமான முறையில் சண்டையிட்டு அவர்களை வடலியடைப்பில் — இந்துக் கல்லூரிப் பகுதியில் இருந்து விரட்டியடித்தனர்.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவ அணியினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கிச் சென்றனர்.

இராணுவத்தினரின் முன்னேற்றத்தை முறியடிக்கும் இத்தாக்குதலில் ஈடுபட்டிருந்த வீரவேங்கை கண்ணவேல் (அராலி தெற்கு, கொட்டைக்காடு) வீரமரணமடைந்தார்.

(ஒ-15-8-4-13 17)

---



## யாழ்ப்பாண மக்களுக்கோர் குளிர்மையான செய்தி

உங்கள் நலன்கருதி 24 மணி நேரமும்

**பனிக்கட்டி ICE BLOCK**

**விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது**

என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

உங்கள் நாளாந்தத் தேவைகளை முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்.

### புறோமோட்டேஸ்

என்ஜினியரிங் கம்பனி லிமிட்.

844, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(32048)


---

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொக்குவில் சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று காலை முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு!

★ காலை 8. 30 மணி — ஷப்றா அணி எதிர் வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்ட் அணி

★ பிற்பகல் 1 30 மணி — யாழ். பல்கலைக்கழக அணி எதிர் மானிப்பாய் பரிஷ் 'ஏ' அணி (இ-3)

★ ★ ★

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தால் நடத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று காலை 9 மணி முதல் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு!

★ முற்பகல் 9 மணி — நாவாந்துறை சென். மேரிஸ் அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. வெள்ளை அணி

★ முற்பகல் 10 மணி — பருத்தித்துறை ஐக்கிய வி. க. அணி எதிர் வைக்கிங்ஸ் வி. க. அணி

★ முற்பகல் 11 மணி — நீர்வேலி ஐக்கிய வி. க. அணி எதிர் நாவாந்துறை சன். நீக்கலஸ் வி. க. அணி

★ பிற்பகல் 2 மணி — சென். றோக்ஸ் வி. க. அணி எதிர் அரியாலை ஐக்கிய வி. க. அணி

★ பிற்பகல் 3 மணி — நாயன்மார்கட்டு பாரதி வி.க. அணி எதிர் பமிலியன் வி.க. அணி

★ பிற்பகல் 4 மணி — யுத்தாமல் வி. க; அணி எதிர் நாவாந்துறை கலைவாணி வி. க; அணி (இ-8)

★ ★ ★

புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி திருவாளர்கள் பொ. தர்மு, வை. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் நினைவாக கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்ட (செற்றப்) சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு!

★ ஆவரங்கால் மத்திய வி. க. அணி எதிர் நாயன்மார்கட்டு பாரதி வி. க. அணி

★ புத்தூர் கலைமதி வி.க. அணி எதிர் புத்தூர் வீனஸ் வி. க.

★ ★ ★

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 39 ஆவது அகவை விழாவை ஒட்டி மின்னொளி விளையாட்டுக் கழகம் யாழ், மாவட்ட மட்டத்தில் நடாத்திவரும் கரப்பந்தாட்ட (செற்றப்) சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணி — அரியாலை ஐக்கிய வி. க' பி' அணி எதிர் நயன்மார்கட்டு பாரதி. வி.க' ஏ' அணி.

★ பிற்பகல் 4 மணி — அச்சுவேலி ஸ்ரீ விக்கினேஸ்வரா வி. க. ஏ' அணி எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி. க.' பி' அணி. (ஐ)

## கொடியேற்ற வைபவம் நடைபெறவில்லை

நேற்று வியாழன் நடைபெற இருந்த சில்லாலை புனித யாகப்பர் தேவாலய திருநாள் கொடியேற்றம் அப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலைமை காரணமாக நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-51)

---

படையினர்…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியாலும், கத்திகளாலும் மம்மை வெருட்டினார்கள் அப்போது இடம்பெற்ற தாக்குதலின் போது எம்மை சுடுவது போல ஆவேசம் கொண்டிருந்தனர்.

படையினர் சென்ற பின்னர் தான் எமக்கு உயிர் வந்தமாதிரி இருந்தது என்றார். (இ-15)

---

ஊழல்…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளிப்பு நிலையங்களுக்குள் புகுதல் —

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பகிரங்கமாக வாக்களித்தல் — போன்றவை தேர்தல் நாள் அன்று இடம்பெறக்கூடிய வாய்ப்பு உண்டு.

இவ்வாறு அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (இ-எ-6)

---

## வல்வையில் இரண்டாவது…

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காடு, அதே இடத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான சிவசம்பு தர்மகுலம் (42 வயது என்பவர் மரணமானார்.

மேலும் தம்பிராசா பிறேமராசா (24 வயது), திருமதி மாயவன் ரஞ்சிதமணி (36 வயது), அவரது மகள் மாயவன் செல்வகுமாரி (18 வயது), எஸ். சுந்தரம் (80 வயது) ஆகியோர் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். சிறுகாயங்களுக்கு இலக்கான வேறு சிலர் இந்திராணி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காட்டுவளவு, கொத்தியால் பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டு வீச்சுக்களினால் வீடுகள் சில முற்றாக சேதமாகின.

இன்னும் சில குண்டுகள் கடற்பகுதியிலும், வெற்றுக் காணிகளிலும் விழுந்து வெடித்தன. கடற்பகுதியில் விழுந்த குண்டுகளினால் மீன் பிடிப் படகுகள் பல அழிந்து நாசமாகின.

நேற்றும் வல்வைப் பகுதி பாடசாலைகளில் பரீட்சைகள் குழம்பின. (ஒ-155-178)

---

## கண்காட்சித் திகதி மாற்றம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில்

இன்று (22-07-1994) ஆரம்பமாக இருந்த மேற்படி கண்காட்சி, இம் மாதம் 28. 29. 30ஆம் திகதிகளில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறேன்.

க, புகன்சிறீந்திரன்,
(கண்காட்சிக் குழுச் செயலாளர்);

[32043]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ், கிளைத் தலைமையகம்
ஊர்காவற்றுறைப் பிரிவு

## தையல் பயிற்சி

சுய தொழிலை ஊக்குவிக்கும் நோக்காக இப்பிரிவினால் 01-08-94 தொடக்கம் ஆறு மாத கால தையல் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

ஆர்வமுடைய யுவதிகள் 23-07-94 அன்று சனிக்கிழமை காலை 9-00மணிக்கு தமது விண்ணப்பங்களுடன் நேர்முகத் தெரிவுக்காக இப் பிரிவுப் பணிமனைக்கு சமுகமளிக்கவும்;

-பிரிவு நிர்வாகம்-

59, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(32043)

---

## காணவில்லை

பருத்தித்துறை வீதியில் இருபாலை கல்வி நிலையத்திற்கும் வட்டக்குளத்திற்கும் இடையில் தங்கக் கைச்சங்கிலி ஒன்று 12 ஆம் திகதி காலை 10 மணியளவில் கைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்ட முகவரியில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திரு. ப. ரகுநாதன்
ஆயுள்வேத வைத்தியர்,
இருபாலை கல்வி நிலையத்திற்கருகில்.

இருபாலை,
கோப்பாய்;

(32047)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

### நல்லூர் கந்தசுவாமி கோயில்

1994 ஆம் ஆண்டு

### மஹோற்சவகால தற்காலிக கடைகள்

01. நல்லூர் இந்து பிடுதிக்கு அருகிலும்
02 ஆலயம் முன்பாக பருத்தித்துறை வீதியிலும்
03 கோயில் வீதியில் ஆலயத்துக்கு வடக்குப் புறமாகவும்
04. பண்டாரமாளிகை வளவில் மாநகரசபை அலுவலகத்திற்கு மேற்குப்பக்கமாகவும்

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 03 - 08 - 94 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 100/- ஐயும் மீளளிக்கப்படக் கூடிய பிணையாக ரூபா 500/- ஐயும் செலுத்துவதன் பேரில் 02 08. 94 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3. 00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பூர்த்திசெய்யப் பட்ட படிவங்கள் 03 -08 -94 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12. 00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் உரிய வரைபடத்தையும் பார்வையிட முடியும்;

குறிப்பு:-

மேற்படி சந்தைப் பகுதியில் அனுமதிக்கப்படும் கடைகள் தவிர முன்கூட்டிய அனுமதி பெற்றிராத எந்த வியாபாரமும் திருவிழாக் காலத்தில் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

வே; பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
21 - 07 - 1994.

(இ/8774)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 328/1 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-07-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org